பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 30 | திங்கட்கிழமை | 13.05.2024 | அதிர்வு 286

## மைத்திரிபால இராஜிநாமா!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் 06



# விடுதலைக்காகப் போராடும் இனத்தின் சிறகுகள் இழப்புகளால் வலுவிழக்காது!

## இதற்கு ஈழத்தமிழினம் சாட்சியம் என திருமலையில் சிறீதரன் சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

விடுதலை வேண்டிப் போராடும் இனமொன்றின் வேட்கைக்கு அந்த இனம் எதிர்கொள்ள நேரிடும் இழப்புகள் ஒருபோதும் தடையாக அமையாது என்பதற்கு ஈழத்தமிழினம்தான் சமகால சாட்சியம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06





### தமிழ்ப் பொது வேட்பாளர் வெறும் அரசியல் கோஷமே

# தமிழ்பேசும் மக்களின் ஆதரவு ரணிலுக்கே!

### ஐ.தே.க. அமைப்பாளர் தெரிவிப்பு



"தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயமெல்லாம் வெறும் அரசியல் கோஷங்கள் மாத்திரமே. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பேராதரவு வழங்க வேண்டும். அப்போதுதான் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய சூழ்நிலை உருவாகும்."

– இவ்வாறு ஜனாதிபதி 06



சில விடயங்கள் கீழே இருந்து மேலே போகும். சில விவகாரங்கள் மேலே இருந்து கீழே வரும். முறைமை மாறினால்சிக்கல்தான். அத்தகைய ஒரு விடயம் பற்றிய தகவல் இது:–

யாழ்ப்பாண மாவட்டத்தில் மத்திய விவசாய அமைச்சின் ஊடாகப் பயனாளிகளுக்கு இலவசக் கோழிக் குஞ்சு விநியோகம் இடம் பெற உள்ளது. இதற்கான பயனாளிகள் யாழ் மாவட்டத்தில் ஆக நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து மட்டுமே தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றனர். சாவகச்சேரியில் 34 பேர், தெல்லிப்பளையில் 50 பேர், சங்கானையில் 16 பேர், கரவெட்டியில் 40 பேர் எனப் பயனாளிகள் தேர்வு இடம்பெற்றிருக்கின்றது. 06



# பசு வதைக்கு எதிராக நல்லூரில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணத்தில் பசு வதைக்கு எதிராக இலங்கை சிவ சேனை சிவத் தொண்டர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டம் நல்லை ஆதீனத்திற்கு முன்பாக நேற்றுக் காலை இலங்கை சிவசேனை தலைவர் மறவன்புலவு க.சச்சிதா னந்தன் தலைமையில் நடைபெற்றது. “காசாவுக்கு ஒரு நீதி இந்துக்களுக்கு இன்னொரு நீதியா?”, “நிறைவேற்று, நிறை வேற்று பசு வதைத் தடைச் சட்டத்தினை நிறைவேற்று!” மற்றும் “புனித சின்னத்தினை சிதைக்காதீர்!” என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வண்ணம் தமது எதிர்ப்பு போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் சிவபூமி அறக்கட்ட ளைத் தலைவரும், தெல்லிப் பளை துர்க்கா தேவஸ்தான தலைவருமாகிய ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணம் மத்தி யஸ்தான நாகவிகாரை விகாராதிபதி விமலரத்தன தேரர், இந்து சமயப்பேரவையின் தலைவர் சக்தி கீரிவன் மற்றும் இலங்கை சிவசேனை சிவத்தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.





# சப்ரகமுவ மாகாணத்தில் ஆசிரியர்கள் வெற்றிடம்

சப்ரகமுவ மாகாணத்தில் 1,080 பாடசாலைகளில் 4 ஆயிரத்து 600 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன என கல்வி அமைச்சர தெரிவித்துள்ளது.

இவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண கல்வி செயலாளர் சாமர பமுனு ஆராச்சி கூறியுள்ளார்.

அதற்கிணங்க, முதற்கட்டமாக 425 பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்திற்கு 877 ஆசிரி யர்களுக்கும் உயர் தரத்திற்காக 159 ஆசியர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education



# போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடா செல்ல முயன்ற இருவர் கைது

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இரு இலங்கையர்களும், அவர்களுக்கு உதவினார் எனக் கூறப்படும் நபரொருவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எமிரேட்ஸ் விமானச் சேவையின் ஊடாக கனடா செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கி வந்த போது அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 47 மற்றும் 37 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலுக்கு அமைய மேற்படி நபர்களை கனடாவுக்கு அனுப்புவதற்கு உதவியதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் நீர்கொழும்பில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

# சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞான வினாத்தாள் பாடத்திட்டத்திற்கு புறம்பாக உள்ளதாக குற்றச்சாட்டு




கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சையின் விஞ்ஞான பாட வினாத்தாள் பாடத்திற்கு புறம்பாக தயாரிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் இது தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சினால் சாதாரண தர மாணவர்களுக்குப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் விதிமுறைகள் தொடர்பில் முன்னதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விஞ்ஞான பாட வினாத்தாளில் 3 பல்தேர்வு வினாக்களும், 3 கட்டுரை வினாக்களின் 4 பகுதிகளும் பாடத்திட்டத்திற்கு புறம்பாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என மாணவர்களும் ஆசிரியர்களும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப வழிபாட்டில் பண்டிதரின் தாயுடன் பங்குபற்றிய சுமந்திரன்





முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் முதலாவது நாளில் முள்ளிவாய்க்காலில் உயிரழந்த உறவுகளின் ஆத்மா சாந்தியடைய கம்பர்மலை வன்னிச்சி அம்மன் கோவிலில் பூசை வழிபாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் சுகிர்தனும் புலிகளின் முன்னாள் போராளி மேஜர் பண்டிதரின் தாயாரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி இளைஞர் அணிச் செயலாளர் தயாபரனும் ஈடுபட்டனர்.

அத்தோடு கம்பர்மலை சந்தியில் பாரதி இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்விலும் அவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## வெசாக் மற்றும் பொசன் தினத்தை முன்னிட்டு

# விசேட சலுகை விலையில் சதொச உணவுப் பொருள்கள் வழங்க முடிவு




எதிர்வரும் வெசாக் மற்றும் பொசன் தினத்தை முன்னிட்டு நுகர்வோருக்கு பொருள்களை சலுகை விலையில் வழங்குவதற்கு சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அன்னதான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்கும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய அந்தந்தப் பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தானசாலைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களுக்கான முன்பதிவுகளை செய்யுமாறு சதொச நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

INDSRI FERRY

# தாமதத்திற்கு வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும், தாமதமான கப்பலின் வருகையினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை 13/05/2024 முதல் 16/05/2024 இயக்கமுடியவில்லை. சேவையினை 17/05/2024 இல் இருந்து இயக்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். 13/05/2024 முதல் 16/05/2024 பதிவு செய்த பயணிகளை 17/05/2024 சேவைக்கு மாற்றியுள்ளோம்.

பதிவு செய்த பயணிகள் 17/05/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் விரும்பிய திகதிகளில் பயணிக்கலாம் அல்லது செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். செலுத்திய கட்டணத்தினை பெற்றுக்கொள்ளலாம்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்ன, ஏது என்று விசாரித்ததில், இந்தப் பயனாளிகள் பட்டியல் பிரதேச செயலகங்களிலிருந்து யாழ் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து மத்திய விவசாய அமைச்சுக்கு அனுப்பப்படவில்லை என்பது தெரிய வந்தது.

மாறாக, மத்திய விவசாய அமைச்சிலிருந்து இந்த நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமான பயனாளிகள் பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியல்களைச் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி, விநியோகித்துக்கான பரிந்துரைகளை உறுதி செய்து அனுப்பி வைக்குமாறு மத்திய விவசாய அமைச்சிலிருந்து யாழ் மாவட்டச் செயலகத்திற்கு வழிகாட்டல் வந்திருக்கிறது.

அதாவது பிரதேச செயலகங்களில் இருந்து, மாவட்ட செயலகம் ஊடாக, மத்திய விவசாய அமைச்சுக்கு போக வேண்டிய – தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் – பட்டியல், அதற்குத் தலைகீழ் மாறாக, மத்திய விவசாய அமைச்சிலிருந்து மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டு, பிரதேச செயலகங்களின் பரிந்துரை ஒப்பங்களைப் பெற்று அனுப்புமாறு கோரப்பட்டிருக்கின்றது.

ஏன் இப்படி என்று விசாரித்தால், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர. அவரின் சுதந்திரக் கட்சி தோஸ்து யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன். அவர் கொடுத்த பட்டியலை விவசாய அமைச்சு வாங்கி, ஆவணங்களைச் சரியாகக் கோவையில் பேணுவதற்காக உரிய பரிந்துரை ஒப்பங்களைப் பெற்றுத் தருமாறு செயலகத்துக்கு 'அன்பு கட்டளை' வழங்கியிருக்கின்றது என்று தெரிய வருகின்றது.

ஆனால் அதை அனுப்பிய மத்திய விவசாய அமைச்சுக்கு யாழ்ப்பாணத்தின் தற்போதைய அரசியல் கள நிலைமை புரியவில்லைப் போலும். இங்கு கடமையில் இருக்கும் அதிகாரிகள் பலரும் பதில் பொறுப்புகளில் இருப்பவர்கள். மாவட்டத்திற்குரிய அமைச்சரின் சம்மதமின்றி விவசாய அமைச்சுக்கு பணிபுரிந்தால் இங்கு மாவட்டத்தில் வேலை கிழிந்து விடும் அல்லவா..?

அதனால் மத்திய விவசாய அமைச்சு அனுப்பிய பட்டியல் யாழ் மாவட்ட செயலகத்தினால் இப்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாகவும், அங்கு பயனாளிகளின் பட்டியல் புதிதாக – மாற்றாக – தயாராகி வருகிறது எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் ஒன்று தெரிவித்தது.

ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் பதவியில் இருந்து அவர் ஆடிய ஆட்டம் இப்போது இவரது கட்டுப்பாட்டில்...!

காலம் மாற... கோலமும் போக்கும் மாறும். அதுதான் விதி...!

## விடுதலைக்காகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று (வெருகல்) பிரதேச மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கும்இடையிலானசந்திப்புநேற்றுவெருகல் – சீனன்வெளி பகுதியில் ஈச்சிலம்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் வாரத்தை நினைவுகூரும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், மக்கள் முன் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேலும் தெரிவித்ததாவது:–

:சர்வதேசம் பார்த்திருக்க, எங்கள் இனத்தின் மீது வலிந்து புரியப்பட்ட இனப்படுகொலைதான் இந்த நூற்றாண்டின் ஆகப்பெரும் மனிதப் பேரவலம். அந்த அவலத்தின் விளிம்பில் எங்கள் இனத்தின் ஆயுத ரீதியான ஆத்ம பலத்தை இழந்த போதும், விடுதலை குறித்த எங்கள் பயணத்தின் வீரியம் இன்னும் குறைந்துவிடவில்லை. தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்துவதற்கான உந்துதலை, இறந்த எம் உறவுகளின் ஆத்மாக்களே தருகின்றன." – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் சண்முகம் குகதாசன், ஈச்சிலம்பற்று பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் சங்கர், ஓய்வுநிலை அதிபர் இரத்தினசிங்கம் மற்றும் மாவட்டக் கிளை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய மூவர் நேற்றிரவு கைது!



தமிழினப்படுகொலைநினைவேந்தல் வாரத்தின்ஆரம்பநாளானநேற்றுமுள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய இரு பெண்கள் உட்பட மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் மேற்படி மூவரையும் சம்பூர் பொலிஸார் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

கைதானவர்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் மூதூர் பிரதேச சபை உறுப்பினர் ஹரிகரகுமாரும் உள்ளடங்குகின்றார்.

இரவு வேளையில் துப்பாக்கிகளுடன் வந்த ஆண், பெண் பொலிஸாரால் அநாகரிகமான முறையில் கைதான மூவரும் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்பேசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்று பேர் கொண்ட குழுவின் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு வடக்கில் உள்ள ஓரிரு கட்சிகள் முன்னெடுத்து வரும் முயற்சி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஆனந்தகுமார் மேலும் தெரிவித்ததாவது:–

"இலங்கையிலேயேஇனவாதமற்ற,மதவாதமற்ற கட்சியென்றால் அது ஐக்கிய தேசியக் கட்சியாகும். அனைத்து இன மக்களும் ஓரணியில் திரளக்கூடிய கட்சியாகவும் அக்கட்சி திகழ்கின்றது. ஐ.தே.கவின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க, 'ஸ்ரீலங்கா பெஸ்ட்' என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுபவர். அவரிடம் இனவாதம், மதவாதம் கிடையாது, அனைவரும் இலங்கையர்கள், அனைவருக்கும் சம உரிமைகள் உண்டு என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றார்.

அதனால்தான் சிறுபான்மையின மக்களின் காவலனாகக் கருதப்படும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் பேராதரவு வழங்கி வருகின்றனர். 2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ரணிலின் கோரிக்கையின் பிரகாரம் தமிழ் பேசும் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கினர். அதன்பின்னர் ரணில் கூறியதால் சஜித்தையும் ஆதரித்தனர். அடுத்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே தமிழ் பேசும் மக்கள் உள்ளனர். இதனைக் குழப்புவதற்குச் சில தமிழ் அரசியல்வாதிகள் முற்படக்கூடாது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியின் கீழ்தான் தமிழ் பேசும் மக்களின் அபிவிருத்தி அரசியல் மற்றும் உரிமை அரசியல் என்பவற்றை வென்றெடுக்க முடியும். எப்போதும் உண்மையைக் கூறி அரசியல் நடத்தும் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வுகளை வழங்குவார். எனவே, ரணிலின் வெற்றியில் தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பங்காளிகளாக வேண்டும். மாறாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கோஷம் ஊடாக மக்களைக் குழப்பி, சாதகமான சூழலை திசை திருப்ப முற்படக்கூடாது. அவ்வாறு செய்தால் அது தமிழ் மக்களின் நலனுக்கு எதிராகவே அமையக்கூடும்." – என்றார்.

## மைத்திரிபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பதவியில் இருந்து விலகியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மைத்திரி தரப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போதே தலைமைப் பதவியில் இருந்து விலகுவதாக மைத்திரி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து தலைமைப் பதவிக்கு விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இதையடுத்து பதில் தலைவராக நியமிக்கப்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தலைமைப் பதவியில் இருந்து விலகுவதாக மைத்திரி நேற்று அறிவித்துள்ளார்.

அதேவேளை, சந்திரிகா தரப்பு, சுதந்திரக் கட்சி பதில் தலைவராக நிமல் சிறிபால டி சில்வாவை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பல்கலை ஊழியர் இன்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவரும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், பல்கலைக்கழக வாயிலில் அல்லது அருகில் உள்ள நகரில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவுள்ளதாக ஊழியர் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் அதனைத் தொடர்ந்து மாணவர் ஒன்றியத்தினருடன் இணைந்து ஊடக சந்திப்பு ஒன்றும் நடைபெறவுள்ளதென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் த.சிவரூபன் தெரிவித்தார்

# டக்ளஸ், விக்கி,சித்தர் ஊடாக யாழில் கோழிக் குஞ்சு வழங்கல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் த.சித்தார்த்தன் ஆகியோருக்கு விவசாய அமைச்சின் ஊடாக கோழிக் குஞ்சுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய விவசாய அமைச்சின் ஊடாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் கோழிக் குஞ்சுகள் மானியச் விநியோகம் இடம்பெறவுள்ளது. இவ்வாறு இடம்பெறவுள்ள பட்டியலில் 4 பிரதேச செயலாளர் பிரவுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதே நேரம் அதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரில் அனுமதிக்கப்பட்ட தொகை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிபார்சு செய்யும் பயனாளிகளிற்கு வழங்கப்படவுள்ளது. இதற்கமைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு 160 கோழிக் குஞ்சுகளும் இரண்டு இன்குபேற்றர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் த.சித்தார்த்தன் ஆகியோருக்கு தலா ஒரு இன்குபேற்றரும் 80 கோழிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன என மாவட்டச் செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரணில் - சஜித் ஒருபோதும் ஒன்றிணையமாட்டார்கள்!

## அடித்துக் கூறுகின்றார் ரஞ்சித் மத்தும பண்டார

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் ஒன்றிணைப்பதற்கு எந்தவொரு வெளிநாடும் முற்படவில்லை. ஜனாதிபதி சஜித், பிரதமர் ரணில் என்ற கோரிக்கைக்குக்கூட நாம் உடன்படப் போவதில்லை."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"ரணில், சஜித் இணைய வேண்டும் எனக் கட்சியில் உள்ள ஓரிருவரே பரிந்துரைக்கின்றனர். ஆனால், அவருடன் இணைவதற்கு எமது கட்சிக்கு எந்தவொரு தேவைப்பாடும் கிடையாது. கட்சியில் உள்ள 95 சதவீதமான உறுப்பினர்கள் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளனர். சஜித் பிரேமதாஸவும் இந்த விடயத்தில் உறுதியாக உள்ளார்.

இரு தரப்பையும் இணைப்பதற்கு வெளிநாடொன்று முற்படுகின்றது என்ற கருத்தையும் நான் ஏற்கவில்லை. எமது கட்சியை வெளிநாடு வழிநடத்த முடியாது. சஜித் ஜனாதிபதி, ரணில் பிரதமர் என்ற கோரிக்கை தொடர்பில் நாம் எந்தவொரு தரப்புடனும் கலந்துரையாடவில்லை. அதற்கான தேவைப்பாடும் கிடையாது.



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் 75 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறுவார்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தேவை: ஒரு பொறிமுறை

பிரிட்டிஷ் பிரஜாவுரிமை கொண்டிருந்த டயானா கமகே, உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் தமது நாடாளுமன்றப் பதவியை இழந்தமையை அடுத்து தென்னிலங்கை பிரதம சங்கநாயக்கர் வண. கலாநிதி ஓமல்பே சோபித தேரர் ஓர் அதிர்ச்சிச் செய்தியை வெளியிட்டிருக்கின்றார்.

இரட்டைக் குடியுரிமை கொண்ட பத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தற்போது நாடாளுமன்றத்தில் உள்ளனர் என்பதுதான் அந்த அதிர்ச்சித் தகவல்.

வரும் தேர்தலுக்கு முன்னர் அந்த எம்.பி.க்கள் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்திருக்கின்றார்.

"உயர்நீதிமன்றத் தீர்ப்பின் வெளிச்சத்தில், அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்கள் கட்சிகளுக்குள் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அது பற்றிய விவரத்தை வெளியிடுமாறு வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் பதவி விலக வேண்டும் இல்லையெனில், அந்தந்த கட்சித் தலைவர்களே அந்தத் தொடர் தவறுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"இந்த எம்.பி.க்களுக்கு நாட்டின் மீது எந்த விசுவாசமும் இல்லை அவர்கள் தனிப்பட்ட லாபத்திற்காக நாடாளுமன்ற பதவிகளை வகிக்கின்றனர். அவர்களை நாங்களே அம்பலப்படுத்துவோம். அதற்கான திறமை எங்களிடம் உள்ளது. ஆனால் வரவிருக்கும் தேர்தலுக்கு முன் தங்களை அவர்களாகவே வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்" என்றும் அவர் கூறுகின்றார்.

"அவர்கள் முன்வரத் தவறினால், நாங்கள் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இருப்பினும், இந்தப் பிரச்சினைகளில் வழக்குத் தொடர்வது நேரத்தையும் பணத்தையும் விரயமாக்கும்" என்று கூறும் வண. சோபித தேரர் "எனவே, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளில் இருந்து மரியாதையுடன் தாங்களாகவே ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கட்சித் தலைவர்கள் தங்கள் பிரதிநிதிகளை கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்" - என்று தேரர் கூறியுள்ளார்.

அவர் கூறுவது போல இரட்டைப் பிரஜா உரிமை பேணுகின்றமையால் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்க தகுதியற்ற பலர் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கும் சட்டத்துக்கும் முரணாக இன்னும் எம்.பிக்களாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர் என்றால் நாடாளுமன்றம் எனும் உயரிய சபையின் வலிமையும் சுயாதிபத்தியமும் தனித்துவமும் இறைமையும் கேள்விக்குள்ளாகின்றன என்பதுதான் அர்த்தம்.

அவர் கூறுகின்றமைப் போல சம்பந்தப்பட்டோர் தாங்களாகவே பதவி விலக மாட்டார்கள். கட்சித் தலைவர்களும் தாம் தலையிட்டு, பொறுப்பேற்று அதைச் செய்யப் போவதில்லை.

'மயிலே, மயிலே! இறகு போடு' என்றால்அது போடவா போகின்றது? பிடுங்கி எடுக்கத்தான் வேண்டும்.

நாடாளுமன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்ய தகுதியற்றோர் நாடாளுமன்றத்திற்குள் இலகுவாகப் புகவும், அங்கு உறுப்பினர்களாகத் தங்கு தடை இன்றி நீடிக்கவும், சட்டத்திலும் நடைமுறையிலும் தாராள ஓட்டை இருக்குமானால் நாட்டின் சட்டவாட்சி முறைமையில் ஏதோ பெரிய தவறு இருக்கின்றது என்பதுதான் அர்த்தம்.

இவ்விடயத்தில் சந்தேகத்திற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து பகிரங்க அமர்வுகளில் மக்கள் கேள்வி எழுப்பி, அவர்களின் குடியுரிமை தொடர்பில் சந்தேகங்களை நீக்குவதற்கு அல்லது தெளிவுபடுத்துவதற்கு சுருக்க முறையான ஒரு பொறிமுறைக்கான சட்ட ஏற்பாடு ஒன்று உடனடியாகக் காணப்பட வேண்டும். வழமையான சட்ட - நீதிப் பொறிமுறை என்ற பெயரில் ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிந்த பின்னரும் அது தொடர்பான வழக்கு இழுபடும் கால தாமத முறைமை அல்லாத ஒரு நடவடிக்கை முறையை சட்ட மூலம் வாயிலாக விரைந்து கொண்டு வருவது குறித்து அரசியல் தரப்புகள் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

# மோடி, அமித் ஷா மீண்டும் ஆட்சியமைத்தால் ஏழைகள் அடிமைகளாக நடத்தப்படுவார்கள்

## மல்லிகார்ஜுன கார்கே எச்சரிக்கை

"பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்தால் ஏழைகள், தலித்துகள் மற்றும் பழங்குடியினர் அடிமைகள் போல நடத்தப்படுவார்கள்."

– இவ்வாறு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் துலே தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளரான முன்னாள் எம்.எல்.ஏ. ஷோபா பச்சாவ்வை ஆதரித்து நடந்த பிரச்சார பேரணியில் காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்டார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"நாட்டின் ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் பாதுகாக்க காங்கிரஸ் கட்சிக்கு வாக்களியுங்கள், சுதந்திரத்துக்கு முன்பாக ஏழைகள், தலித்துகள், பழங்குடியினர் அடிமைகளைப் போல நடத்தப்பட்டார்கள். மோடி மற்றும் அமித் ஷாவுக்கு மூன்றாவது முறையாக வாய்ப்பு கொடுத்தால் அதே நிலைமை மீண்டும் ஏற்படும். நாம் மீண்டும் அடிமைகளாக்கப்படுவோம்.

உங்களின் நலனுக்காகவும் உங்களின் சொந்த மக்களின் நலனுக்காவும் நீங்கள் வாக்களிக்க வேண்டும். அரசியலமைப்பை நாம் பாதுகாக்க வேண்டும். நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும். இந்தத் தேர்தல் மிகவும் முக்கியமானது.

அரசியலமைப்பு இல்லை என்றால் உங்களைக் காப்பாற்ற யாரும் இருக்க மாட்டார்கள். கடந்த 201 ஆம் ஆண்டு



ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் அரசமைப்பை மாற்றவேண்டும் என்று கூறினார். பின்னர் பல பா.ஜ.க. எம்.பி.க்களும், அக்கட்சியின் தலைவர்களும் அது போன்ற பேசினர்.

மோடி தொடர்ந்து பொய் பேசி வருகிறார். வெளிநாட்டில் உள்ள கருப்புப் பணத்தை நாட்டுக்கு திருப்பிக் கொண்டு வருவேன் என்று அவர் சூளுரைத்தார். ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

ஒவ்வொரு வருடமும் 2 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவேன் என்று தெரிவித்தார்.விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு பதிலாக அவரது தவறான கொள்கைகள் காரணமாக விவசாயிகளின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. இதனால் மோடி ஆட்சியில் இருந்து அகற்றப்பட வேண்டும்." – என்றார்.

# 400 இற்கும் மேற்பட்ட இடங்களில் பா.ஜ.க. வென்று ஆட்சி அமைக்கும்

## வானதி சீனிவாசன் நம்பிக்கை



"400 இற்கும் அதிகமான இடங்களில் வென்று பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. ஆட்சி அமைப்பது உறுதி. நடுநிலையாளர்கள், பத்திரிகையாளர்கள் போர்வையில் பா.ஜ.கவுக்கு எதிராக பிரச்சாரம் செய்வதை மக்கள் முறியடிப்பார்கள்."

– இவ்வாறு பா.ஜ.கவின் எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"400 இற்கும் அதிகமான இடங்களில் வென்று பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. ஆட்சி அமைப்பது உறுதி. நடுநிலையாளர்கள், பத்திரிகையாளர்கள் போர்வையில் பா.ஜ.கவுக்கு எதிராக பிரச்சாரம் செய்வதை மக்கள் முறியடிப்பார்கள். இதுவரை மூன்று கட்ட வாக்குப் பதிவில் 33 கோடி பேர் அதாவது 68.1 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

அடுத்த நான்கு கட்டங்களில் 258 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடக்கவுள்ளது. உலகிலேயே அதிகமானோர் வாக்களிக்கும் தேர்தல் இந்திய மக்களவைத் தேர்தல்தான். இத்தனை கோடி பேர் வாக்களிக்கும் தேர்தல் மிகமிக அமைதியாக நடந்துள்ளது. இந்திய ஜனநாயகத்தின் வலிமை இது.

முதல்கட்ட வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி நடந்தது. அதற்கான தேர்தல் பிரச்சாரம் முடிந்த ஏப்ரல் 17 ஆம் திகதி வரை கருத்துக் கணிப்புகள் வெளியாகிக் கொண்டிருந்தன. இதுவரை வெளிவந்த 2024 மக்களவைத் தேர்தல் கருத்துக் கணிப்புகள், பா.ஜ.கவுக்கு எதிரான ஊடகங்கள் எடுத்த கருத்துக் கணிப்புகளில்கூட பா.ஜ.கவுக்கு மீண்டும் தனிப் பெரும்பான்மை கிடைக்கும் என்றே வந்தன. பெரும்பாலான கணிப்புகள் பா.ஜ.கவுக்கு 350 முதல் 400 இடங்கள் வரை கிடைக்கும் என்றே கூறியது.

ஆனால், முதல் இரண்டு கட்ட வாக்குப்பதிவு முடிந்ததும் பா.ஜ.கவுக்கு பெரும்பான்மை கிடைக்காது. வட மாநிலங்களிலும் பா.ஜ.கவுக்கு எதிர்பார்த்த இடங்கள் வராது என்ற ஒரு பிரச்சாரத்தை, நடுநிலையாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்ற பெயரில் முன்னெடுத்துள்ளனர். 'இண்டி' கூட்டணி கட்சிகளைவிட அக்கூட்டணி வெற்றிக்கு நடுநிலையாளர்கள் போர்வையில் உலா வருபவர்கள் அதிகம் உழைக்கிறார்கள்.

பா.ஜ.கவுக்கு எதிராக நாள்தோறும் அவதூறுகளை, கட்டுக்கதைகளை பரப்பி வருகிறார்கள். பா.ஜ.கவை 'இந்துத்துவ கட்சி'எனப் பேசுவது மதவாதம் இல்லையாம். சிறுபான்மையினர் வாக்குகளை மொத்த அறுவடை செய்ய இந்து மதத்தை இழிவுபடுத்துவது, சனாதனத்தை ஒழிப்போம் என்று சொல்வது மதச்சார்பின்மையாம். ஏன் இந்து மதத்தை, இந்து நம்பிக்கைகளை இழிவுபடுத்துகிறீர்கள் என்று கேட்டால் மதவாதிகள் என்கிறார்கள்.

இந்தியர்களுக்கு என தனித்துவம் எதுவும் இல்லை. அவர்கள் எல்லோரும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் போல, ராகுல் காந்தியின் குரு, காங்கிரஸ் வெளிநாடுவாழ் இந்தியர்கள் பிரிவு தலைவர் சாம் பிட்ரோடா பேசுகிறார். இதையெல்லாம் பிரதமர் மோடி மக்களிடம் அம்பலப்படுத்தி வருகிறார். இதை பொறுக்க முடியாமல் பா.ஜ.கவுக்கு எதிரான பிம்பத்தை கட்டமைக்கும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டுள்ளன." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்ரேலுக்கு அணுகுண்டு மிரட்டல் விடுத்தது ஈரான்





இஸ்ரேலுக்கு ஈரான் அணுகுண்டு தாக்குதல் மிரட்டல் விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது கடந்த ஏப்ரல் மாதம் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் 12 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்திய நிலையில், இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடி மிகவும் உக்கிரமாக இருக்கும் என்று ஈரான் எச்சரித்திருந்தது.

இந்த நிலையில், இஸ்ரேலுக்கு ஈரான் அணுகுண்டு தாக்குதல் மிரட்டல் விடுத்துள்ள நிலையில் இதுகுறித்து ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் ஆலோசகர் கமல் கர்ராசி அவரது கருத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அணு குண்டை உருவாக்குவது குறித்து எங்களிடம் எந்த முடிவும் இல்லை.

அணுஆயுதங்களை பெற்றுக் கொள்ளுதல் அல்லது உற்பத்தி செய்தல் போன்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆனால் ஈரானின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் எங்கள் இராணுவக் கோட்பாட்டை மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

இஸ்ரேல் எங்களது அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தினால் எங்களது தடுப்பு நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும்.” என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், உலக வல்லரசு நாடுகளுடன் 2015 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட அணு சக்தி ஒப்பந்தத்தை மீறி ஈரான் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக யுரேனியத்தை 60 சதவீதம் செறிவூட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலின் கடற்கரை நகர் மீது காசாவிலிருந்து ஏவுகணை தாக்குதல்



இஸ்ரேல் கடற்கரை நகரமான அஸ்கெலோனில் உள்ள குடியிருப்புக் கட்டடத்தின் மீது காசா பகுதியிலிருந்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காசாவின் வடக்குப் பகுதியில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தப் பகுதியில் நள்ளிரவில் நடந்த தாக்குதலில் 3 பேர் காயமடைந்துள்ளனர் என இஸ்ரேலிய செய்தி நிறுவனங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

ஹமாஸ் சமீப காலமாக இஸ்ரேலின் நகரங்கள் மற்றும் கிராமங்கள் மீது தாக்குதல் நடத்துவதை அதிகரித்துள்ள நிலையில், இஸ்ரேலின் கரீம் சலோம் ல்லைப் பகுதியும் நேற்று முன்தினம் தாக்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

காசாவுக்குள் நிவாரண உதவிகள் கொண்டுவர பயன்படுத்தப்பட்ட இந்த எல்லைப் பகுதி மீது நான்கு ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்றை இஸ்ரேல் இராணுவம் இடைமறித்து தகர்த்ததாகவும் வாழ்விடமில்லாத இடங்களில் ஏவுகணை விழுந்ததால் பெரிய உயிரிழப்பு ஏற்படவில்லை எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் காசாவின் தெற்குப் பகுதியில் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஹமாஸ் இந்தத் தாக்குதல்களை தொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"2025ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 3 வீதமாக உயரும் என எதிர்பாரர்க்கின்றோம். அதற்கமைய அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தாதியர் சேவையின் ஸ்தாபகரான புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே 12 அன்று சர்வதேச தாதியர் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு சர்வதேச தாதியர் தினத்தின் கருப்பொருள் 'நமது தாதியர்கள் – நமது எதிர்காலம், தாதியர் சேவையின் பொருளாதார சக்தி' என்பதாகும்.

இதேவேளை, இலங்கை தாதியர் பல்கலைக்கழகம் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. அது தொடர்பான நினைவுப் பலகை டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக திறந்து வைக்கப்பட்டது.

அரச சேவை தாதியர் சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"அரச ஊழியர்களுக்கு முடிந்த அளவு சலுகைகளை வழங்கியுள்ளோம். அடுத்த ஆண்டு சம்பளத்தை அதிகரிப்பது குறித்தும் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் நாங்கள் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டின் கடைசி இரண்டு காலாண்டுகளில் தான் தொடங்கியது. 2020 இல் இருந்து மூன்றரை வருடங்கள் இந்த நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை. பொருளாதார நெருக்கடி மற்றும் கோவிட் தொற்றுநோயால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

மேலும் நாட்டில் போசாக்குக் குறைபாடு அதிகரிப்பது ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு என்பன சில குழந்தைகளின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளன. இந்த நிலை எதிர்காலத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனவே, இந்நிலையைக் கட்டுப்படுத்த நிதி ஒதுக்க வேண்டியதாயிற்று. அதற்காக உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமுர்த்தியை விட மூன்று மடங்கு நிவாரணத்தை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தோம். மேலும், பயனாளிகளின் எண்ணிக்கை 18 லட்சத்தில் இருந்து 24 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு ஊழியர்களின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக தனியார் துறையிலும் தோட்டத் துறையிலும் சம்பளத்தை உயர்த்துவதற்கான சமிக்ஞை கிடைத்துள்ளது.

கடந்த சிறுபோகத்தில் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றோம். கடந்த சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்தை போன்று இந்த வெசாக் பண்டிகையிலும் அந்தத் தொகையானது சமூக பொருளாதாரத்தில் இணைக்கப்படும். இந்நிலையில் அடுத்த ஆண்டு 3 வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என நம்புகிறோம். அதன் போது மீண்டும் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம்.

இது தொடர்பில் தெளிவுடன் செயற்படும் தாதியர் சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன். அடுத்த ஆண்டு, நாட்டில் பொருளாதாரம் மேலும் முன்னேற்றமடையும். அந்த பொருளாதாரம் வளர்ச்சியை நாம் ஏற்படுத்தாவிட்டால், எம்மால் இந்த இலக்குகளை அடைவது கடினம்.

தற்பொழுது பணத்தை அச்சிட முடியாது. பணத்தை அச்சிட மாட்டோம் என்று சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். அப்படியானால் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி. எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் தற்போது பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து வருகின்றோம். அடுத்ததாக தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். அதன்படி, இந்த ஆண்டு வங்குரோத்து நிலையில் இருந்து முழுமையாக விடுபடுவோம். ஆனால் இந்தப் பொருளாதாரப் பிரச்சினை இத்துடன் முடிவடையாது. கடன் தள்ளுபடி செய்தாலும் மிகுதியை மீளச் செலுத்த வேண்டும்.

எனவே, நமது பொருளாதாரத்தை மாற்றுவதற்காக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு பதிலாக, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு நாங்கள் சம்மதித்துள்ளோம். அதிலிருந்து நாம் விலகிச் செல்ல முடியாது. அதிலிருந்து விலகினால், இந்த சலுகைகளை இழக்க நேரிடும். எனவே இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நாம் எப்போதும் வரவு – செலவுத்திட்ட உபரியை பராமரிக்க வேண்டும். இன்றேல் கடனை மீளச் செலுத்த முடியாது. இந்த அனைத்து முடிவுகளையும் நாட்டுக்காக எடுத்தோம் என்றே கூற வேண்டும். இப்போது நாம் ஏற்றுமதி பொருளாதாரத்துடன் வேகமாக செல்ல வேண்டும். இதற்கான சில சட்டங்களை தயாரித்துள்ளோம். இதில் சில சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மற்றவை இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளன.

இவற்றில் முதலாவதாக மத்திய வங்கிச் சட்டத்தை நிறைவேற்றினோம். பணத்தை அச்சிடுவதையும், அரச வங்கிகளில் கடன் பெறுவதையும் இந்தச் சட்டம் தடைசெய்வதோடு அதன் மூலம் மத்திய வங்கிக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது. மேலும், 03 சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரச கடன் முகாமைத்துவச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாம் கடன் வாங்குவதற்கு ஓர் எல்லை உண்டு. அப்படியானால், பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன்களைப் பெறுவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் அந்தச் சட்டத்தின்படி செயல்பட வேண்டும்." – என்றார்.







# மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கக் கூட்டம்



மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 2024 ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் கொழும்பு மெரினா ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது புதிய நிர்வாகக் குழு தெரிவு இடம்பெற்றது. அதற்கமைய புதிய தலைவராக எஸ்.சிவகுமார் நியமிக்கப்பட்டார்.

அத்துடன் செயலாளராக ஜி.பிரசாந்தனும், பொருளாளராக வின்சன் ஒக்கோர்ஸ/ம் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்திய கலாநிதி க.அருள்மொழியும் (பொது வைத்திய நிபுணர்), கௌரவ அதிதியாக வைத்திய கலாநிதி மு.மதிதரனும் கலந்துகொண்டனர்.








# சாதாரண தர பரீட்சை வினாத்தாள் 'வாட்ஸ் அப்பில்' பகிரப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் ஆங்கிலப் பாட வினாத் தாள் “வாட்ஸ் அப்“ ஊடாக பகிரப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி – கட்டுகஸ்தோட்டை பகுதியில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆங்கிலப் பாட வினாத்தாள் பகிரப்பட்ட “வாட்ஸ் அப்“ குழுவின் நிர்வாகியொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி ஆங்கிலப் பாடத்திற்குரிய பரீட்சை இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அந்த வினாத்தாள் “வாட்ஸ் அப்“ குழுக்களினூடாக பகிரப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 61 வயதான அந்த சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය

# சு.க. மைத்திரிபால அணியின் செயலாளராக கீர்த்தி உடவத்த

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார் என மைத்திரிபால சிறிசேன அணியினர் அறிவித்துள்ளனர்.

அந்த கட்சியின் நிறைவேற்றுக் குழு ஏகமனதாக எடுத்த தீர்மானத்துக்கமைய அவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் அறிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவி மற்றும் அந்த கட்சியின் நிறைவேற்று குழுவிலிருந்து முன்னதாக பதவி விலகினார்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை நியமிப்பதற்கு கட்சியின் நிறைவேற்றுக்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஹப்புத்தளையில் மண்சரிவு அபாயம்



ஹப்புத்தளையில் இருந்து ஹல்துமுல்லை வரையான வீதியில் மண்சரிவு ஏற்படுவதற்கான அபாயம் நிலவுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஹப்புத்தளை – ஹல்துமுல்லை வீதிகளில் பயணிக்கும் சாரதிகள் அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் சில மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பதுளை, கண்டி, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## காணி உரிமைக்கான போராட்டத்தில் களப் பலியான

# மலையகத் தியாகி சிவனு லெச்சுமணனின் நினைவேந்தல் ஹட்டனில் டிக்கோயாவில்

(மஸ்கெலியா நிருபர்)

மலையக தியாகி சிவனு லெச்சுமணனின் 47 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நினைவேந்தல் நிகழ்வு ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

இதன் போது தியாகி சிவனு லெச்சுமணனின் உருவப் படத்திற்கு ஈகை சுடர் ஏற்றி மலர்தூவி நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் முன்னாள் பிரதி நீதி அமைச்சர் வீ.புத்திரசிகாமணி, இலக்கியவாதியும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான மு.சிவலிங்கம், இலக்கியவாதியும் சமூகச் செயற்பாட்டாளருமான பொன். பிரபாகன், இலக்கியவாதியும் சட்டத்தரணியுமான ஏ.செல்வராஜ் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



சிவனு லெச்சுமணன் 1977 ஆம் ஆண்டு மேமாதம் 11 ஆம் திகதி துப்பாக்கி சூட்டில் உயிருழந்து இற்றோடு 47வருடங்கள் ஆகின்றன.

பத்தனை டெவோன் தோட்டப் பகுதியில் காணி உரிமையைக் கோரி போராட்டம் செய்த போது சிவனு லெச்சுமணன் என்ற இளைஞன் 17வயதில் பொலிஸாரின் துாப்பாக்கி சூட்டுக்கு பலியாகியமை குறிப்பிடதக்கது.

# ஈழவேந்தனுக்கு வெருகலில் நேற்று நினைவஞ்சலி நிகழ்வு

( ஹஸ்பர் ஏ.எச்.ஹலீம்)

கனடாவில் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் எம்.கே.ஈழவேந்தனின் நினைவஞ்சலி நேற்று திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் சீனன்வெளி விநாயகர் கோயிலில் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சண்முகம் குகதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவஞ்சலி நிகழ்வில் நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.ஶ்ரீதரன், கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் தொண்டர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



ஏப்ரல் மாதமளவில் கனடாவில் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனை நினைவு கூரும் வகையில் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



# நுவரெலியா மாவட்டத்தில் மழை

(மஸ்கெலியா நிருபர்)

வெகு நாள்களுக்குப் பின்னர் நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோட்டன், கினிகத்தேன, வட்டவளை ஆகிய பகுதிகளில் கனத்த மழை பெய்தது வருகிறது.

இதனால் இப் பகுதியில் உள்ள அனைத்து நீர் ஓடைகள் மற்றும் அருவிகள் ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கடுமையான வெப்பமான கால நிலை நீங்கி சற்று குளிரான கால நிலை நிலவுகிறது.

இந்த மழை காரணமாக விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இம் மழை காரணமாக நீர் ஏந்து பகுதியில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கெசல்கமு ஓயாவில் அதிகளவில் வெள்ளம் ஏற்பட்டு உள்ளது.

# சாவகச்சேரி தமிழரசுப் பணிமனையில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## சுமந்திரன், சிவஞானம், சயந்தன் பங்குபற்றினர்













**(த.சுபேசன்)**

சாவகச்சேரி தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பங்குபற்றினார்.

முள்ளிவாய்க்கால் வலியையும் ஓர்மத்தையும் உணர்வுகளையும் அடுத்த தலைமுறைக்கு கடத்தும் முகமாக சிறுமி ஒருவருக்கு நினைவுக் கஞ்சி வழங்கி சுமந்திரன் நிகழ்ந்த் தொடக்கி வைத்திருந்தார்.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்து மத குரு, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சிவஞானம்சா. வகச்சேரி நகரசபையின் முன்னாள் தவிசாளர் சிவமங்கை, சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னதாக, முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் முதலாவது நாளில் நெல்லியடி பஸ் நிலையத்திலும் முள்ளிவாக்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தனும் கலந்து கொண்டு முள்ளிவாக்கால் கஞ்சியைப் பொதுமக்களுக்கு வழங்கி வைத்தார்.







# வாழைச்சேனை ஜெயந்தியாலை பிரதேசத்தில் இரு தரப்பு மோதலினால் பெரும் பதற்ற நிலை

## விசேட அதிரடிப்படை தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கையில்





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள புனானை ஜெயந்தியாலை பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஏற்பட்ட மோதில் இருவர் பலத்த காயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியி ஏற்பட்டுள்ள பதற்றத்தையடுத்து அங்கு விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:

இந்தப் பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் மாலை ஓட்டோவில் பிரயாணித்தனர். இதன் போது அங்கு மோட்டர் சைக்கிளில் பிரயாணித்த 23 வயது இளைஞன் ஒருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இளைஞன் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து இளைஞன் அங்கிருந்து தப்பி ஓடி அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் புகுந்து கொண்டான்.

இதனையடுத்து அந்த இளைஞனை வெளியேவருமாறு ஓட்டோவில் சென்ற இருவரும் ஹோட்டல் மீது தாக்குதல் நடாத்தினர். அங்கிருந்த கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்த நிலையில், வெளியே வந்த இளைஞனுக்கும் அந்த இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இளைஞனின் தாக்குதலில் அந்த இருவரும் படுகாயமடைந்தனர். அதை அடுத்து அங்கிருந்து இளைஞன் தப்பி ஓடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதில் படுகாயமடைந்த 47, 45 வயதுடைய இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்த பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இன முறுகல் ஏற்படும் நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக உடனடியாக விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு பிரதேசத்தில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# திருமண நிகழ்வுக்குச் சென்று விட்டு வீட்டுக்கு திரும்பும் வழியில் விபத்தில் உயிரிழந்த யுவதி





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தம்புள்ளை ஹபரணை வீதியில் திகம்பத்தஹ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளையில் இருந்து ஹபரணை நோக்கி பயணித்த கப் ஒன்று அதே திசையில் பயணித்த காரை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர் திசையில் இருந்து வந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த கப் வண்டியில் பயணித்த பெண் ஹபரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹபரணை ஹிரிவடுன்ன பிரதேசத்தில் வசித்து வந்த சந்தியா குமாரி என்ற 44 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவர் மேலும் சிலருடன் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு மீண்டும் வீடு திரும்பும் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது இதில் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரில் மூன்று வயது சிறுமி ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கத்தாலான தொல்பொருள்களுடன் கற்பிட்டி ஆலங்குடாவில் ஒருவர் கைது





**(ரஸீன் ரஸ்மின்)**

கற்பிட்டி – ஆலங்குடா பகுதியில் வீடொன்றிலிருந்து சட்டவிரோதமான முறையில் அங்கு பதுக்கப்பட்டிருந்தத – தங்கத்தாலானது எனச் சந்தேகிக்கப்படும் – தொல்பொருள்களுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கற்பிட்டி, ஏத்தாளை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படைக்கு சொந்தமன விஜய கடற்படையினரும், புத்தளம் பிரிவு குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகளும் இணைந்து இந்தப் பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது இந்தர் தொல்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்தப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றைச் சோதனை செய்த போது, அந்த வீட்டிற்குள் மிகவும் சூட்சகமான முறையில் சட்டவிரோதமாக பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தொல்பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

தங்கத்தில் தயாரிக்கப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் வாள் ஒன்றும், ஆமை , குதிரை மற்றும் இரண்டு சிறிய சிலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர், பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்திலானது என சந்தேகிக்கப்படும் தொல்பொருள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் குற்ற விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனக் கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர்.



# காரைதீவு கண்ணகை அம்மனின் சடங்கு இன்று ஆரம்பமாகிறது...!

- விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா-

கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மனின் திருக்குளிர்த்தி சடங்கு இன்று திங்களன்று (13) கடல்நீர் எடுத்துவந்து கல்யாணக் கால் நடலுடன் ஆரம்பிக்கின்றது.

இந்தச் சடங்கு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

**வரலாறு**

'அணியாரங் கற்பின் அருங் கலமே நல்ல வணிகர் குலத்து தித்த மாதே - பணிமணியின் சேர் சிலம்பணியும் செல்வியே காரை நகர் தாயே எமைக் காத்தருள்' என்கிறது அம்மன் பாடல்.

சேரமன்னனின் அழைப்பின் பேரில் கடல்சூழ் இலங்கை மன்னன் கஜபாகு சென்றான் என்பது வரலாறு .

முப்பெரும் விழாவுக்குச் சென்ற கஜபாகு மன்னனின் அழைப்பின் பேரில் சேரன் செங்கூட்டுவனின் வழிவந்த சேனாதிராசனின் விதவை மகளான தேவந்தி அம்மையார் தனது மகள் சின்ன நாச்சியாருடன் கதிர்காம யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்து கண்டி மன்னரின் விருந்தினராக தங்கியிருந்த சில நாட்களின் பின்னர் யாத்திரையை மேற்கொண்டார்.

அம்மையார் தான் வரும் பொழுது தன்னுடன் பத்தினித் தெய்வத்தின் மூன்று சிலைகளைக் கொண்டு வந்ததாகவும் அவற்றில் இரு சிலைகள் அகோர வடிவுடையவை என்றும் ஒன்று சாந்த சொரூபமான வடிவம் கொண்ட சிலையாகும் என்றும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

அம்மையாரின் யாத்திரை வழியில் ஏறாவூரில் அவர், அவருடைய சிலைகளில் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டார்.

பின்னர் மீதி இது சிலைகளுடன் காரைதீவு எனும் சைவமும் தமிழும் போற்றப்பட்ட பழம்பெரும் பதியில் வந்து தங்கினார். தேவந்தி அம்மையார் காரைதீவில் விருந்தோம்பலில் கவரப்பட்டு தங்கியிருந்த வேளையில் அங்குள்ள வேம்ப மரத்தின் கீழ் தான் கொண்டுவந்த இரு விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடு இயற்றினார்.

அந்தக் காலத்தில் கண்டி அரசனின் ராஜ பிரதிநிதியாகிய வன்னிமை அவரது மனைவி சகிதம் சிங்காரத் தோப்பில் இருந்து யானை மீதேறி நகர்வலம் வந்தார். அவர் அம்மையாரின் பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். அங்கு வன்னிமையின் மனைவியின் கண்ணொளி மங்கப் பெற்ற நிலையில், அம்மையார் வேண்டிக் கொண்டதால் மீண்டும் கண்ணொளி பெற்றமை வரலாறு.

இதற்காக வன்னிமை அங்கு புனித ஆலயத்தை ஸ்தாபித்து அதனை நிர்வகிப்பதற்கு நூற்றி ஒரு ஏக்கர் நெல் காணிகளை நேர்கடனாக வழங்கினார். இதனை 'கண்கண்வெளி' என அழைப்பர். இன்றும் அது உள்ளது.

கிராமத்தில் தேவந்தி அம்மையாரும் அவரது மகளான சின்ன நாச்சியாரும் வாழ்ந்து வருகையில், அங்கு வாழ்ந்து கொண்டிருந்த குடிமக்களின் பிள்ளைப்பேறு குறைந்துகொண்டு சென்றது. இதற்கு காரணமாக அமைந்த அமைந்த பத்தினி தெய்வத்தின் அகோர வடிவத்தை மக்களின் கோரிக்கையின் படி ஜனசந்தடி அற்ற பட்டிமேடு என்னும் கிராமத்தில் தேவந்தி அம்மையார் பிரதிஷ்டை செய்தார்.

அழகு நிறைந்த சின்ன நாச்சியார் மீது மையல் கொண்ட இளைஞர்கள் அம்மையாருக்கும் அவரது மகளுக்கும் தொந்தரவு கொடுத்தனர். அதன் காரணத்தால் சாந்த சொரூபமான பத்தினி தெய்வ விக்ரகத்துடன் தனது மகளுடனும் தம்பிலுவில் என கிராமத்துக்கு இடம் பெயர்ந்து விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தார்.

இந்த நிலையில் காரைதீவு கிராம மக்களுக்கு கொள்ளை நோய் - அம்மை நோய் என்பது துயரங்களைக் கொடுத்தது. இதன் காரணமாக மக்கள் தம்பிலுவில் கிராமத்துக்குச் சென்று தேவந்தி அம்மையாரை மன்றாடி மீண்டும் காரைதீவுக்கு அழைத்து வந்து பத்தினி தெய்வத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்து அம்மையாரின் வேண்டுகோளின்படி கற்புக்கரசி கண்ணகியைக் குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு பெருவிழா எடுத்தனர். **தொடர்ச்சி▼**

# காரைதீவு கண்ணகை அம்மனின் சடங்கு இன்று ஆரம்பமாகிறது...!

தொடர்ச்சி▲

இப்பெரு விழாவில் கொம்பு முறித்தல், போர்த் தேங்காய் உடைத்தல், தட்டு வசந்தன் போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்தன என்பது வரலாறு கூறும் செய்திகள் ஆகும்.

பெருவிழா வைகாசித் திங்களில் வருடா வருடம் ஆரம்பிக்கின்றது. முதல் நாள் பட்டயம் கூறுகின்ற நிகழ்வும் இடம்பெற்று வந்தது. அது இந்த முறை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வைகாசிப் பொங்கல், திருக்குளிர்த்தி, குழுத்தி எனும் நாமங்கள் அழைக்கப்பட்டு வந்த இந்தச் சடங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறுவது அம்பாளின் அனுக்கிரகமே.

### திருக்குளிர்த்தி

பொதுவாக ஈழநாட்டிலுள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருவிழா தமிழ் மாத வைகாசி பௌர்ணமியில் இடம்பெறும் .

பூவரசம் மரமே தெரிவு செய்யப்படுவது மரபாகும்.

சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும் பொழுது ஏலவே தெரிவுசெய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியில் உள்ள பூவரச மரத்தில் உள்ள பூவரசு மரத்தின் கிளையை ஆயுதம் பாவிக்காமல் முறித்து அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்துக்குக் கொண்டு செல்வார்கள்.

ஆலயத்திலேயே பத்தினி தெய்வத்துக்கு முன்பாக பூவரசு மரக்கிளைக்குக் கப்புகனார் கிரியைகள் செய்து கூறைச் சேலை அணிவித்து ஆலயத்தில் உணர்வு பூர்வமாக நடுவார்கள்.

அங்கு பூசைசெய்து முதல் நாள் நிகழ்வு நிறைவடையும்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கல்யாணக் காலுக்கும் அம்பாளுக்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர்

தும் நேர் கடன்களை செலுத்துவார்கள்.

அன்றைய தினம் பக்தர்கள் உபவாசமிருந்து பத்தினி தெய்வத்திடம் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி விரதம் அனுஸ்டிப்பார்கள். திங்கள் முழு நாளும் பக்தர்களால் சிலப்பதிகாரக் கதை பாடப்படும்.

இறுதிநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு அம்பாளுக்கு சிறப்பான விசேட பூஜை இடம்பெற்று தொடர்ந்து குளிர்த்திப் பாடல் பாடி வழிபடுவர்.

பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனைக் குளிர்விக்கும் பொருட்டுக் கலயத்தில் மந்திரிக்கப்பட்ட தூய நீரில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தாமரைப் பூக்கள், சிலம்பு, அம்மானைக் காய் என்பவற்றுடன் அம்பாளின் தல விருட்சமான வேம்பு மரத்தின் பெறப்பட்ட இலைகளால் பாடல்களின் கருத்துகளுக்கு ஏற்ப கலயத்தில் எடுத்துச் செல்லப்படும் நீர் தெளிக்கபடும்.

அவ்வேளையில், எட்டு திசைகளிலும் இருந்து வழிபடும் அம்பிகை அடியார்கள் மீது கலயத்தில் உள்ள தீர்த்தம் வேப்பிலைக் கொத்தால் தெளிக்கப்படும். இறுதியில் குளிர்த்தி பாடல்கள் பாடி முடித்ததும் கப்புகனாரால் மங்கல கீதம் பாடப்பெற்று சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

குளிர்த்தி முடிவடைந்ததும் பக்தர்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும்.



ஆயினும் காரைதீவு மற்றும் வற்றாப்பளையில் கோயில் கொண்டிருக்கும் பத்தினி தெய்வத்தின் திருவிழா வைகாசி பௌர்ணமி திங்கட்கிழமை நடைபெறும். ஆயினும் திங்கட்கிழமை அல்லது வைகாசி பௌர்ணமியில் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை நடைபெறுவது மரபாகும்.

கண்ணகி வழக்குரையில்... ‘வைகாசித் திங்கள் வருவேன்...’ என்று கூறுகின்றது. அதை அடியொற்றி திங்கள் என்பது பௌர்ணமியையும் திங்கட்கிழமையையும் குறிப்பதாகும்.

காரைதீவு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் தமிழ் மாதம் வைகாசி திங்கட்கிழமை நடைபெற்று வருவது மரபுவழி வந்ததாகும்.

முதல் நாள் நிகழ்வு

இவ்வாலயத்தின் திருவிழாவானது குளிர்த்தி நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன்வரும் திங்கட்கிழமை அன்று சமுத்திர தீர்த்தம் எடுத்தவுடன் கல்யாண கால் நடுவது உடன் ஆரம்பமாகின்றது.

இங்கு கல்யாண காலாக

உடுக்கை அடித்து ஊர் சுற்று காவியம் பக்தர்களால் பாடப்பெறும்.

மறுநாள் புதன்கிழமை தொடங்கி ஞாயிறு வரைக்கும் பகல் ஒரு மணிக்கு அம்பாளுக்கு பூசையும் மாலை 7 மணிக்கு மணிக்கு அம்பாளுக்கு உடுக்கை அடித்து ஊர்சுற்றுக் காவியம் பாடுதலும் 5 நாள்களில் நிகழ்வு நிறைவு பெறும்.

ஐந்து நாள்களிலும் பத்தினி தெய்வத்துக்குப் பகல் பூஜை செய்யும்போது அம்பாளுக்கு சோறும் கறியும் படைக்கப்படும். இதனை பச்சை கட்டுதல் என்று அழைப்பார்கள்.

இவ்வாலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு வழங்கப்படும் மரபுரீதியான சிறப்பான பிரசாதம் சோறும் கறியும் ஆகும்.

### குளிர்த்தி

இறுதி நாளான திங்கட்கிழமை முழுநாளும் பூஜைகள் இடம்பெறுவதில்லை. அன்றைய தினம் பக்தர்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துவார்கள் ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும் பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும் காவடி எடுத்

### எட்டாம் சடங்கு

குளிர்த்தி முடிந்து அடுத்து வரும் திங்கட்கிழமை அம்பாளுக்கு எட்டாம் சடங்கு இடம்பெறும். பிற்பகல் 3 மணியில் இருந்து கிராமத்து மக்கள் அங்கு தனித்தனியாகப் புதிய நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியை கொண்டு பொங்கலிட்டு நேர்த்தி செய்வார்கள். இது ஆலயத்தின் விசேஷமான அம்சம் என்பதை குறிப்பிடலாம்.

யாழ். நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரையும் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தாவையும் இந்த நாட்டுக்கு ஈன்றளித்த கற்பின் தெய்வம் கண்ணகித் தாயைக் காரைதீவு தமிழ் கிராம மக்கள் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபட்டு வருகின்றனர்.

பாரம்பரிய வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு நாட்டு மக்கள் மனங்களில் நம்பிக்கை மிகுந்த வாழ்க்கையை உருவாக்குவதாக.

# இன்றைய ராசி பலன்கள் - 13.05.2024



### மேஷம்

இன்று கடினமான நாளாக இருக்கும். உங்கள் பொறுமை இழப்பீர்கள். பணி களை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்காது. உங்களின் சௌகரியங்களை இழக்க நேரும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் வீட்டின் புனரமைப்பிற்கான வகையில் கட் டாய பணச் செலவு செய்ய நேரும். உங்கள் செலவுகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலக் குறைபாடு ஒன்றிற் காக பணத்தை செலவு செய்ய நேரலாம். இது உங்க ளுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.



### ரிஷபம்

இன்று உற்சாகமான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக உங்கள் இயல் திறனை நிரூபித்துக் காட்டுவீர்கள். அர்ப்பணிப்புடன் பணி செய்து வெற்றி காண்பீர்கள்.

உங்களது கலகலப்பான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பண வரவு அதிகரித்து காணப்படும். தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள் ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக உங்கள் மன நிலையும் உடல் நிலையும் ஆரோக்கியமாக இருக் கும்.



### மிதுனம்

இன்று சற்று மந்தமான உணர்வுகள் காணப்படும். அதனை தவிர்த்தல் நலம். இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்ட மிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். இதனால் ஆரோக்கியமான உறவு பராமரிக்கப் பட்டு நல்லுறவு மேம்படும்.

அதிக செலவினங்கள் காணப்படுகின்றது. பணம் இழக்காமலிருக்க சாதுர்யமாக திட்டமிட்டு செலவு செய்யுங்கள்.

உங்களுக்கு கண் எரிச்சல், முதுகுவலி மற்றும் கால் வலி ஏற்படலாம்.



### கடகம்

இன்று அதிக பொறுப்பும் பதற்றமும் காணப்படும். விவேகமான, முறையான அணுகுமுறை மேற்கொள்வது சிறந் தது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாக பதட்ட உணர்வு ஏற்படலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் வீட்டின் சீரமைப்பிற்காகவும் புனர் நிர் மானத்துக்காகவும் பணம் செலவு எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.



### சிம்மம்

இன்று காணப்படும் சிறிய பிரச்சி னைகளைக் கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப் பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.



### கன்னி

இன்று அனைத்து விதத்திலும் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மற்றும் உறுதி காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் சுறுசுறுப்பாக பணியாற்று வீர்கள். குறைந்த நேரத்தில் விரைந்து பணிகளை ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு ஆரோக்கியமாக இருக்கும்.

இன்று பண வரவு காணப்படும். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும்.



### துலாம்

உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

இன்று கடினமான வேலைகளையும் எளிதாக ஆற்ற முடியும். பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்துகொள் வீர்கள். இதன் காரணமாக உங்கள் துணை உங்களை நன்கு புரிந்துகொள்வார்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் லாபகரமானதாக இருக்கும் என்பதால் அதில் பங்கு கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் புத்துணர்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.



### விருச்சிகம்

நீங்கள் செய்த தவறுகளை இன்று சரி செய்ய வேண்டும். உங்கள் செயல் களை முறையாக ஏற்பாடு செய்து ஒரு கட்டுப்பாட்டோடு செய்யுங்கள்.

உங்கள் பணிகளை பொறுமை யுடனும் உறுதியுடனும் ஆற்ற வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் பிரியமானவரின் வார்த்தைகள் உங் களை காயப்படுத்துவதாக உணர்ந்து சோர்வு கொள் வீர்கள். சகஜமாக அணுகுவது மகிழ்ச்சியான உறவுக்கு நல்லது.

இன்று செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். அதற்கு தகுந்தால் போல பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தேவையற்ற கவலைகள் மற்றும் தோல் எரிச்சல் காரணமாக நீங்கள் தூக்கத்தை இழப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.05.2024

## தனுசு

இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும். திட்டமிடுதலும் முயற்சியும் இன்று மிகவும் தேவை.

அமைதியாக இறைவழிபாட்டில் ஈடுபட்டு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். அதனால் வெற்றியும் நல்ல பெயரும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படாதீர்கள். நட்பாக அணுகி கலகலப்பாக பழகுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம். இன்று சிறந்த முறையில் பணத்தை கையாள இயலாது.

காய்ச்சல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம்.

## கும்பம்

இன்றைய நாளை உங்களின் சுய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

இன்று பணிகள் விருப்பமானதாக இருக்கும். என்றாலும் வெற்றி பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

நீங்கள் இன்று ஆரோக்கியமாக நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

## மகரம்

உங்களிடம் போதிய தைரியம் காணப்படும். உங்கள் முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கும். பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியும் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் ஆற்றல் உங்களுக்கு தெரிய வரும் நாள் இது. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்யோன்யமாய் இருப்பீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடியாக காணப்படுவீர்கள்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை போன்ற கூடுதல் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.

## மீனம்

நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள். என்றாலும் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். தொழில் சார்ந்த அணுகுமுறையால் பணிகளை சரிவர ஆற்ற இயலும்.

உங்கள் துணையிடம் உங்கள் கருத்துகளை வலியுறுத்துவீர்கள். நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் நலம்.

பண வரவும் செலவும் காணப்படுகின்றது. எதிர்காலத்துக்காகப் பணத்தை சேமிக்க வேண்டும்.

உங்கள் சொந்த வளர்ச்சி குறித்த மனக் குழப்பம் காரணமாக பதற்ற உணர்வுடன் காணப்படுவீர்கள்.







## பேரிடர் கால தீராப்பசி தீர்த்த:

# ஆர்மேனியருக்கு மதாக்! யூதர்களுக்கு மனா!! தமிழர்க்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி!!!




- நவீனன் -

ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுத்து இனப்படுகொலை செய்வது மாத்தரமின்றி – அந்த மக்களை பட்டினி போட்டு கொல்வதும் கொடுமையிலும் கொடுமையான இனப் படுகொலையாகும்.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் சர்வதேச சட்டப்படி கருதப்படுகிறது.

இக்கோர இனப் படுகொலைகளை எதிர்கொண்ட மக்கள், எப்படி வாழ்வின் இறுதிக் கணங்களில் போராடியிருப்பார்கள் என்பதை எழுத்தில் வடிக்க முடியாது. கட்டாய பட்டினியால் மக்கள் எவ்வாறு போர்க்கால உணவைப் பெற்றார்கள் என்பதை அலசும் சிறிய ஆவணம் இது.

### ஆர்மேனிய இனப்படுகொலையும் மதாக் உணவும்!

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது பெரும் இனப் படுகொலையாகத் துருக்கியில் ஒட்டோமான் ஆட்சியில் ஆர்மேனியர்கள் மீது படுகொலை செய்யப்பட்டமை தான் வரலாற்றில் பதியப்பட்ட கோர நிகழ்வாகும்.

இந்தக் கொடூர சம்பவத்தை உலகமே இனப் படுகொலை என்று கூறியபோது, துருக்கி அதனை கடுமையாக எதிர்த்து வருகிறது. ஆர்மேனிய இனப் படுகொலை இந்த நூற்றாண்டின் மிகக் கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங்களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதியப்படுத்தப்பட்டுள்ளது.

20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய படுகொலையாகக் கருதப்படும் ஆர்மேனிய படுகொலையில் “மதாக்” என்ற ஒருவகை உணவு தான் அவர்களை உயிரோட்டமாக வைத்திருந்தது.

ஆர்மேனிய மக்கள் தங்களின் பண்பாட்டு உணவாகவும் இனப்படுகொலையின் அவலம் நிறைந்த உணவாகவும் மதாக்கைத் தாங்கள் புலம்பெயர்ந்த பகுதிகளில் அதன் வலிகளை உணர்ந்து அடுத்தடுத்த தலைமுறையினருக்கு உணர்த்தி வருகின்றனர்.

ஆர்மேனிய இன அழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்ற போது, 1915 ஆம் ஆண்டில் மொத்தமாக 15 லட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப் படுகொலையாக நடந்தேறிய ஓர் வரலாற்று கொடூரமாகும்.

தற்போது ஆர்மேனிய இனப் படுகொலையை ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்மேனியர்கள் இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள்.

ஒட்டோமான் படைகளால், திட்டமிட்ட வகையில், 15 லட்சம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டனர் என்று ஆர்மீனிய வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### யூதப் படுகொலை - ஹாலோகோஸ்ட்

இரண்டாம் உலகப் போரில் 1941 இலிருந்து 1945 வரை, யூதர்கள் ஒரு இனப்படுகொலை மூலம் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டனர். நாஸி கட்சியின் உயர் தலைமையின் வழிகாட்டல்கள் உடன், ஜேர்மனி அரசின் அதிகார மையத்தின் ஒவ்வொரு பகுதியும் ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா முழுவதும் பெரும் படுகொலைகளை நடத்துவதில் ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டுவந்தது.

இந்தப் பெரும் இன அழிப்பு இரண்டாம் உலகப் போரில், 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்கள் ஜேர்மனியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் ஹாலோகோஸ்ட் என்று குறிப்பிடுவர்.

ஜேர்மனியில் ஆட்சியில் இருந்த, அடொல்ஃப் ஹிட்லரின் நாஸி இன அழிப்புக் கொள்கையின் படி பல அறிஞர்கள் பெரும் எண்ணிக்கையானோர் இந்த இன அழிப்பில் கொல்லப்பட்டனர்.

ஜேர்மன் அரசு இதனை “யூதர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு” என வர்ணித்தது.

நாஸி ஜேர்மனியில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட எல்லாப் பிரிவினரதும் மொத்தத் தொகை 9 தொடக்கம் 11 மில்லியன்வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

### யூதர்களின் பட்டினி தீர்த்த ‘மனா’

வரலாற்று ரீதியாக இஸ்ரேலியர்களின் எகிப்திய அடக்குமுறையின் கசப்பைக் குறிக்கும் அடையாள உணவான “மனா” எனும் உணவை

தொடர்ச்சி ▼

# பேரிடர் கால தீராப்பசி தீர்த்த:
# ஆர்மேனியருக்கு மதாக்!
# யூதர்களுக்கு மனா!!
# தமிழர்க்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி!!!

தொடர்ச்சி▲

நாஸி வதை முகாம்களில் உண்டதாகவும் சான்றுகள் உள்ளன.

மனா என்பது பைபிளின் படி, இஸ்ரேலிய யூதர்கள் நீண்ட இடப் பெயர்வில், பாலைவனத்தில் பயணம் செய்தபோது கடவுள் அவர்களுக்க வழங்கிய ஒரு உண்ணக் கூடிய பொருள் என்றும் பொருள்படும்.

யூதர்களின் நீண்ட இடப்பெயர்வு வரலாற்று புத்தகத்தில், மனா தரையில் வீழ்ந்த உறைபனி போன்ற நல்ல, செதில் போன்ற பொருள் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இரவு நேரத்தில் பனியுடன் வந்து சேருவதாகவும், இது சூரியனின் வெப்பத்–தால் உருகுவதற்கு முன் சேகரிக்கப்பட வேண்டும் என்றும், ஒரு கொத்தமல்லி விதை போன்று, வெள்ளை நிறத்தில் இருந்தது என்றும் எக்ஸோடஸ் நூல் மேலும் கூறுகிறது.

### முள்ளிவாய்க்காலும் இன அழிப்பும்!

2009 மே இறுதிப் போரின், இறுதி நாள்களில் மக்களுக்கு உணவு, மருத்துவ தேவைகளை முற்றுமுதலாக தடுத்து நிறுத்தப்பட்டப் போது



களமுனைப் போராளிகளுக்காக சேமித்து வைத்திருந்த அரிசிகளைக் கொண்டு பட்டினியால் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தண்ணிரும் அரிசியும் கொண்ட கஞ்சியை சமைத்துக் கொடுத்தனர்.

நந்திக்கடலின் இருபுறமும் பெருந்திரளாக நோக்கிவந்த மக்களைக் கொத்துக் கொத்தாய் கொன்ற துயரம் ஒருபுறமும் மிச்சமிருக்கும் உயிரைக் காக்க மறுபுறமும் இடையில் பட்டினியால் தகித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தேவாமிர்தமாக இறுதி நாள்களில் இருந்ததுதான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது ஒரு தமிழர்களின் குறியீட்டு உணவு. அதன் அடையாள வழி, எங்கள் மீது நிகழ்ந்தப்பட்ட கொடூர இனவழிப்பு நிகழ்வை, இனிவரும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உணர்த்த வேண்டும்.

ஈழத்தில் “மே 18” என்கிற உணவு விசேட உணவாக இருக்க வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை செய்யப்படும் அருமருந்தாக அது இருத்தல் வேண்டும். எல்லோரும் கூடும் இடங்கள் என்றில்லாமல், எங்கும்,எவரும், அந் நாளில் அதைச் செய்து உண்ண வேண்டும். அந்த நாளின் அடையாளமாக அது அன்றைய நாளின் வீட்டு உணவாகவும் இருக்க வேண்டும்.

### மே 18 - முள்ளிவாய்க்கால் கஞ்சி

மிகக்குறைந்தளவிலான அரிசி, நெல், தண்ணீர் என்கிற இந்த மூன்று பொருள்களாலானதே முள்ளிவாய்க்கால் கஞ்சியாக போர்க் களத்தில் தயாரிக்கப்பட்டது.

முக்கியமாக உப்பு, பால் என்பவை அறவே அற்றதாகவே முள்ளிவாய்க்கால் கஞ்சி இருக்க வேண்டும். அப்படித்தான் அது அன்றைய நாளில் இருந்தது. சுவையற்ற நீருணவு அது. ஒரு லீற்றர் தண்ணீரில் அதிகமாக நூறு கிராம் அரிசியைக் கொண்டதாக அது இருந்திருக்கலாம். அப்படித் தான் அது தயாரிக்கப்பட்டது.

உணவு என்பதற்கு மேலாக, அந்த நாளின் பெறுமதியும், அதன் நோக்கமும் புரியும் வகையில் அதை நாம் தயாரித்துப் பரிமாற வேண்டும். இதன் மூலமே “முள்ளிவாய்க்கால் கஞ்சி” என்கிற வரலாற்று அடையாளத்தை நாம் பேணலாம்.

### சோழர்களின் கூழ்வார்க்கும் விழா

இந்தியாவில் காலனித்துவ ஆட்சியில் உருவாக்கப்பட்ட பட்டினிச் சாவுகள் எண்ணிலடங்காதவை. ஆங்கிலேயர்களும் உணவை ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தியதற்கும் சான்றுகள் பல உண்டு.

ஆங்கிலேய ஆட்சியின்போது திட்டமிட்டு உருவாக்கப்பட்டப் பெரும் பஞ்சத்துக்குச் சோழமண்டல பகுதிகளில் பட்டினிச்சாவு தலை விரித்தாடியது. அப்போது கம்பு, கேப்பை போன்ற தானியங்களைப் பயன்படுத்திக் கூழாக மக்களுக்கு வழங்கப்பட்ட துயரத்தின் நீட்சியை பண்பாட்டு வழிநின்று ஆடி மாதங்களில் “கூழ்வார்க்கும் விழா” பல பகுதிகளில் நடந்து வருகிறது.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதில் இருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களைக் கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது.

காலனித்துவ வரலாற்றின் கொடுமைகள் இன்னமும் ஏதோ ஓர் வகையில் தொடர்கிறது. இவை எல்லாம் மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

### கஞ்சியும் எதிர்கால தலைமுறையும்

வரலாற்றின் வழி நின்று, இனப்படுகொலை நினைவேந்தல் நாள்களில் தமிழ்ச் சமூகம் நிச்சயமாக “முள்ளிவாய்க்கால் கஞ்சியை” தங்கள் வீடுகளில் செய்து நாம் நம் அடுத்த தலைமுறைகளுக்கு துயரம் தோய்ந்த நாள்களை நினைவு படுத்துவதோடு நின்றுவிடாமல் அந்த வலியையும் உணர்ந்துக் கொள்வதற்கும் உணவுப் பண்பாடு மூலம் இனவழிப்பின் குறியீடாகவும் இதனை செய்யவேண்டும்.

தொடர்ச்சி▼

## பேரிடர் கால தீராப்பசி தீர்த்த:

# ஆர்மேனியருக்கு மதாக்!
# யூதர்களுக்கு மனா!!
# தமிழர்க்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி!!!



**தொடர்ச்சி▲**

தாயக மண்ணில், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவு கூர்ந்து வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் செயற்படுகின்றது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இன அழிப்புக்கு உள்ளான வரலாற்றையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டை முன்னெடுப்பதே இதன் நோக்கமாக கருதப்படுகிறது.

போர்க்கால வாழ்வை மீள் நினைவுபடுத்தும் வகையில் எமது உறவுகளின் உயிர்காத்த அரிசியும், தண்ணீரும், உப்பும் கலந்தாக்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியை 18 மே அன்று வீடுகளில் காய்ச்சிப் பருகுவதன் மூலம் அந்த நாள்களின் நினைவுகளை அடுத்த சந்ததியும் இந்த அழியாத நினைவுகளை மறவாதிருக்க வேண்டும்.

### அரசின் திட்டமிட்ட உணவுத்தடை

இறுதிப் போரில் சிங்கள அரசின் திட்டமிட்ட உணவுத் தடையும், பல மாத காலத் தொடர் யுத்தத்தாலும் மக்கள் உணவின்றித் தவித்தனர். பலர் ஒரு நேர உணவு கூடக் கிடைக்காமல் பட்டினி கிடந்தார்கள். குழந்தைகளுக்கான உலர் உணவுக்கு அலைந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் போராளிகளுக்காக ஒதுக்கப்பட்ட உணவுப் பொருள்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மக்களுக்கு வழங்கியது. அந்தக் காலகட்டத்திலேயே கஞ்சி வழங்கும் பணியும் தொடங்கப்பட்டது. இறுதிக் காலகட்டத்தில் சிறிய தொகை அரிசியே இருந்தபடியால் அரிசியும் தவிடும் கலந்து உப்புமிட்டு முள்ளிவாய்க்கால்க் கஞ்சியாகக் கொடுக்கப்பட்டது.

அந்தக் கஞ்சியைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பல இடங்களில் செய்து மக்களின் பசியை ஆற்றியது. யுத்தம் முடிவுற்றுப் பல ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும் யுத்தம் தந்த வடுக்களை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. இவ் யுத்தகால நினைவுகளில் மறக்க முடியாதவற்றுள் ஒன்றாக விளங்குவதுதான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

பல லட்சம் மக்கள் கஞ்சிக்காகக் காத்திருந்து தமது பசிப்பிணி போக்கிய வரலாறுகளும் உண்டு. இந்தக் கஞ்சி உணவு அன்றைய நாள்களில் எமது மக்களின் வாழ்வோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகவே காணப்பட்டது. முள்ளிவாய்க்காலில் உணவுக்காகப் பட்ட அவலத்தையும், கஞ்சி உணவே எமது உறவுகளின் உயிரை தக்க வைத்தது என்பதையும் வெளிப்படுத்தும் முகமாகவும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவும் நினைவேந்தல் நாள்களில் கஞ்சி உணவை வழங்குவது வழமையாகும். மே 18 இன அழிப்பு நாளை நினைவு கூரும் போது முள்ளிவாய்க்கால் நிலத்தில் விடுதலைக்குப் போராடிய ஈழத் தமிழினம் பட்ட துன்பத்தையும் உலகத்தமிழினம் நினைவு கூருவது சாலத் தகுந்தது.

முள்ளிவாய்கால் கஞ்சியின் உணவு அடையாளம் என்பது, தாயக மண்ணின் வலிகளையும் வரலாறு சந்ததி மறவா சரித்திரமாக வேண்டும்.

இந்தக் கஞ்சி உணவானது முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது எமது உறவுகள் உணவுக்காகப் பட்ட துன்பத்தை நாம் மட்டுமல்லாது எதிர்கால சந்ததியும், முழு உலகமும் அறிய வேண்டும்.